[2015 செப்டம்பர் 29

13. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999–2000, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"1999–2000 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–09–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிகைச் செலவிற்காக நாம் இப்போது நிதி கோருவதற்கு 17 ஆண்டுகள், 18 ஆண்டுகள், காலம் எடுத்திருப்பது ஏன் என்று நான் அறிய விரும்புகிறேன். இது நியாயமற்ற தாமதம் என்று நான் கருதுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதெல்லாம் PAC–யில் *உங்கள் கட்சி உறுப்பினர்கூட இருக்கிறார்.* PAC–யில் recommend *செய்து அவர்கள் எல்லாம் சேர்ந்து* recommend *செய்துதான் இன்றைக்கு அரசுத் தீர்மானமாகக் கொண்டு வந்திருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் இல்லை. இதில்* objection *ஒன்றும் இல்லை. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை அ. வருவாய்க் கணக்கில் செலவு		(ரூபாய்)
2	மாநில ஆயத் தீர்வைத் துறை	18,07,894
17	கல்வி	143,42,40,370
26	கதர்–கிராமத் தொழில்கள்	3,75,688
33	நகர்ப் பகுதி வளர்ச்சி	24,59,801
35	பாசனம்	97,83,26,215
38	சாலைகளும் பாலங்களும்	5,00,52,258
41	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	94,98,52,559
45	இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	21,21,94,494
46	செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல்	2,02,117
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**362,95,11,396**
	பெருமொத்தம்	**362,95,11,396**